

குன்றத்தூர் ஒன்றிய அ.தி.மு.க பிரமுகர் கொல்லமாநகர் சாருண் தலைமையில் 55 அ.தி.மு.க வினர், அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பசரன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். அருகில் குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி, ஊராட்சி மன்றத் தலைவர் கே.என்.சி.சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய

# முக்கியத் திட்டங்கள் குறித்து தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் கோரிக்கை மனு!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவிடம் அளித்தனர்!

காஞ்சிபுரம், பிப்.16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டங்கள் குறித்து தா.மோ. அன்பரசன் மற்றும் கழகத்தினர் கோரிக்கை மனுக்களை தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினிடம் அளித்தனர்.

சட்டமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் மாவட்டம் வாரியாக சென்று மனுக்களை பெற்று வருகின்றனர்.

அதே வகையில் காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் கிழக்கு மத்திய மேற்கு மாவட்டங்களின் சேர்ந்த கழக பிரதிநிதிகள் விவசாயிகள் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் கருத்து கேட்பு கூட்டம் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று நடைபெற்றது.

பேராசிரியர்.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திருமதி.ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ், சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரை மனுக்களை பெற்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் முதலில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு நிறை வேற்றப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்து பரிந்துரை கோரிக்கை மனுக்களை இக் குழுவினரிடம் அளித்தார்.

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முன்னெடுக்க வேண்டிய சில கோரிக்கைகளை பற்றியும் டான்ஸ்டியா நிர்வாகிகளிடம் இணைந்து கோரிக்கை மனுக்களை அளித்தார்.

ஆலந்தூர் தொகுதியில் உள்ள ஆதம்பாக்கம், நங்கநல்லூர், அய்யப்பன்தாங்கல், கெருகம்பாக்கம், மணப்பாக்கம், கொளப்பாக்கம் ஆகிய இடங்களின் உள்ள நலச்சங்கம் நிர்வாகிகளும் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

அதை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.இதயவர்மன், கழக நிர்வாகிகள் என். சந்திரன், ஏ.வந்தேமாதரம், பம்மல் வே.கருணாநிதி, பல்லாவரம் இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் எம்.சேகர், எம்.கே.டி.கார்த்திக், பட்டூர் எஸ்.ஜபருல்லா, எஸ்.நரேந்திரன், த.வினோத்குமார், மு.தேவராஜ், செங்கல்பட்டு நகரமன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.வி.எம். இளங்கோவன், உள்ளிட்டோர் இக்குழுவிடம் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்த பரிந்துரை கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 361 வது நாள்!

## எழும்பூர் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,பிப்.16-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 361 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (15.2.2026), எழும்பூர் தொகுதி: 1) எழும்பூர் தெற்கு பகுதி: வட்டம் 61, தமிழ் சாலை குழந்தை நல மருத்துவமனை. 2) எழும்பூர் வடக்கு பகுதி: வட்டம் 77, சிவாராவ் ரோடு,பட்டாளம், சென்னை 12. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே. எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, நிர்மலா தேவி. எழும்பூர் தெற்கு/ வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர். பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி. அபாய், சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக் குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதிகளில் கழக துணை பொதுச்செயலாளர் - மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொள்ளும் கலந்துரையாடல் கூட்டம்!

**மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்,சந்திரன் எம்,எல்,ஏ, அறிவிப்பு!**



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதியில் (இன்று திங்கள்கிழமை 16-02-2026) கீழ்கண்ட அட்டவணைப்படி தொகுதிவாரியாக கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுகிறது .

| தொகுதி | இடம் | நேரம் |
|---|---|---|
| திருவள்ளூர் | மாவட்ட கழக அலுவலகம் திருவள்ளூர் நகரம் | காலை 10.30 |
| திருத்தணி | ஜி.ஆர்.டி. ரீஜென்ஸியில் திருத்தணி | மதியம் 12.00 |

மேற்கண்ட நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர்கள் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்


**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ**

செயலாளர் – திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான

# சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான கடன் வசதி திட்டங்கள் செயல்படுத்தப்படுமா?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, பிப்.16-

திராவிடமுன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜேகத்ரட்சகன் அவர்கள் 12.2.26 அன்று மக்களவையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான, கடன் வசதி திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முனைந்துள்ளதா? என்றும் கழிவு நீர் அமைப்புகளை கையாள தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறதா? என்றும் தூய்மைப்பணியாளர்களின் மறுவாழ்வு சட்டம் 2013ன்படி முறையான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்றும் இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளனவா? என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை இணைய மைச்சர் மோகன் சாகு அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில்:

சுகாதாரம் மாநிலப் பட்டியலில் இருந்த போதிலும், கழிவு நீர் அமைப்புகளின் மேலாண்மையில், இயந்திரங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும் என உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை நகர்ப்புற வளர்ச்சி துறை அவ்வப்போது அளித்து வருகிறது என்றும், தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்புகென சபாய் மித்ரா என்ற திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகப் படுத்தியுள்ளது என்றும், இதுவரை 3429 உள்ளாட்சி அமைப்புகள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் உதவியுடன் சுகாதாரப் பணியாளர்களுக்கென நமஸ்தே என்ற திட்;டத்தின் மூலம், சுவச்சதா உதயாமி என்ற திட்டத்தின் மூலமும் இது வரை 16 மாநிலங்களுக்கு 496 தொகுதிகளுக்கென ரூபாய் 42 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும் தமிழகத்திற்தென ரூபாய் 159 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது என்றும் 302 இயந்திரங்கள் வாங்குவதற்கு 43 கோடிகள் செலவிடப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மோகன் சாகு அவர்கள் பதில் அளித்துள்ளார்.

‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரைக் கூட்டம்!

# கரூர் - கோபி சட்டமன்றத் தொகுதிகளில் தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை!

## மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. – என்.நல்லசிவம் பங்கேற்பு!

சென்னை, பிப்.16-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, 17.02.26 மற்றும் 18.02.26 ஆகிய தேதிகளில் மேற்கு மண்டலப் பொறுப்பாளரும், கரூர் மாவட்டச் செயலாளருமான வி. செந்தில் பாலாஜி, எம்.எல்.ஏ, ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என் நல்லசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும், நாடாளுமன்ற திமுகக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி ஆகியோர் கரூர், மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் பல்வேறு பரப்புரை நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

அதன் விபரம் வருமாறு:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் 17.02.26 மற்றும் 18.02.26 ஆகிய தேதிகளில் ``தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரை நிகழ்ச்சி கரூர், மற்றும் கோபிச் செட்டிப் பாளையம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகிறது.

மண்டலப் பொறுப்பாளரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், கரூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில்பாலாஜி, ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி ஆகியோர் இதில் பங்கேற்கவிருக்கின்றனர்.

17.02.26 செவ்வாய்கிழமை, கரூர் மாவட்டம், கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ரெசிடென்சி ஹோட்டலில் முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர் பெருமக்கள், தொழில் முனைவோர், தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் கலந்தாய்வுக் கூட்டமும், பின்னர் கழகத்தின் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடுதல் நிகழ்ச்சியும், மாலையில் கரூர் நகரம், திருவள்ளுவர் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

18.02.26, புதன் கிழமை, ஈரோடு வடக்கு மாவட்டம், கோபி சட்டமன்றத் தொகுதியில் உள்ள வி.எம். கே. மண்டபத்தில் கலந்தாய்வுக் கூட்டமும், மாலை ஆறு மணியளவில் காளமேகம் வீதியில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட பரப்புரை நிகழ்ச்சியில் கழக முண்ணனியினர் பலரும் பங்கேற்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. காளியப்பன்

பிப்ரவரி 16 (2008)



தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சென்னை மேற்கு மாவட்ட முன்னாள் பிரதிநிதி

# க.செல்வம் தாயார் திருமதி. கிரிஜா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை பிப்:16

சென்னை மேற்கு மாவட்டம், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி க. செல்வம் அவர்களின் தாயார் கே.கிரிஜா அவர்கள் வயது 81, நேற்று 15.2.2026 மாலை 3 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சார்பாகவும், 109 ஆ வட்டத்தின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் உடல் நுங்கம்பாக்கம் இடுகாட்டில் இன்று (16.2.2026 திங்கட்கிழமை ) 3 மணி அளவில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஷீபா வாசு

பிப்ரவரி 16 (2023)



சீரணி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

2021ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**